**ஆசிரியர் தேர்வு வாரியம்**

**அறிவிக்கை எண். 04 –A / 2025** **நாள்:27.10.2025**

## ADDENDUM

**அறிவிக்கை எண்.04/2025ற்கான பிற்சேர்க்கை (Addendum) - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளில் 2708 உதவிப் பேராசிரியர்கள் காலிப்பணியிடங்கள் நேரடி நியமனம் - பணியனுபவச் சான்று பதிவேற்றம் செய்தல்**

-----------

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளில் 2708 உதவிப் பேராசிரியர்கள் காலிப்பணியிடங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள, விண்ணப்பிக்கும் நிலையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் பணியனுபவ சான்றிதழ் சமர்பித்தல் தொடர்பான கோரிக்கைகளின் அடிப்படையில் கல்லூரிக் கல்வி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட தெளிவுரையின்படி கீழ்க்கண்டவாறு பிற்சேர்க்கை (Addendum) வெளியிடப்படுகிறது.

1. **<u>பணியனுபவச் சான்று பதிவேற்றம் (Experience Certificate)</u>**

அறிவிக்கை எண். 04/2025 நாள். 16.10.2025இல் Annexure-IVஇல் உள்ள பணியனுபவச் சான்றிதழில், உரிய அலுவர்களிடம் கையொப்பம் பெற்ற பின்பு, அச்சான்றிதழில் கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் [தி(ம)வ] அவர்களின் ஒப்புதல் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து

அவர்களின் நலன் கருதி அறிவிக்கை எண். 04/2025 நாள். 16.10.2025இல் ஏற்கனவே Annexure-IVஇல் கொடுக்கப்பட்டுள்ள

"Certificate approved by
Joint Director (P&D),
Directorate of Collegiate Education,
Chennai"

என்பதை நீக்கம் செய்து கீழ்க்கண்டவாறு Annexure-IV, Annexure-V மற்றும் Annexure-VI-இல் பணியனுபவச் சான்றிதழ்கள் மற்றும் உரிய அறிவுரைகள் (Instructions) வழங்கப்பட்டுள்ளன.

**Annexure-IV** – அரசு / அரசு உதவிப்பெறும் / தனியார் கலை மற்றும் அறிவியல் / மருத்துவம் / பொறியியல் / கல்வியல் கல்லூரிகளில் பணிபுரிவர்களுக்கான பணியனுபவச் சான்றிதழ்

**Annexure-V** – இந்தியப் பல்கலைக்கழகம் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் பணிபுரிவர்களுக்கான பணியனுபவச் சான்றிதழ்

**Annexure-VI** – வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிவர்களுக்கான பணியனுபவச் சான்றிதழ்கள்

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள Annexure-IV, Annexure-V மற்றும் Annexure-VI-இல் கொடுக்கப்பட்டுள்ள பணியனுபவச் சான்றிதழ்கள் மற்றும் அவை சார்ந்து தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி(Instructions) உரிய அலுவலரிடம் கையொப்பம்/சான்றொப்பம் பெற்று பதிவேற்றம் செய்யுமாறு விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்